<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
<u>OS No: 142/2023</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வா.சா. 1(ஹரிணி) நாள் 18.02.2026</u>

**குறுக்கு விசாரணை (1 முதல் 20 , 23 முதல் 25, 27 முதல் 29, 31 முதல் 34 பிரதிவாதிகள் தரப்பில்)**

தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளுக்கு அவர்களது பாகத்தை பிரித்துக கொடுப்பதில் எனக்கு ஆட்சபேணை எதுவும் உள்ளதா என்றால் எங்களது வழக்கின்படி பிரித்துக கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**குறுக்கு விசாரணை (22 ம் பிரதிவாதி தரப்பில்)**

22ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை விவரத்தை தெரிந்து கொண்டேன். தாவாவில் குப்ப மூப்பன் வகையறாவிற்கு 90 செண்ட் பாத்தியம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குப்ப மூப்பனுக்கு சின்னா மூப்பன், கருப்ப மூப்பன் மற்றும் பொன்னா மூப்பன் என்ற 3 வாரிசுகள் என்றால் சரிதான். பொன்னா மூப்பனின் வாரிசுகள் அய்யாவு, கணேசன் மற்றும் சுப்பிரமணி என்றால் பெயர் ஞாபகமில்லை, ஆனால் 3 மகன்கள். கணேசனின் வாரிசு தான் 22ம் பிரதிவாதி என்றால் சரி. 22ம் பிரதிவாதிக்கு ஏக்கர் 0.10 பொதுவில் பாத்தியம் என்றால் எனக்கு அது பற்றி குறிப்பிட்டு சொல்ல இயலாது, குப்ப மூப்பன் வகையறாவிற்கு மொத்தத்தில் 90 செண்ட் பாத்தியம் என்பது தான் என்னால் சொல்ல இயலும். குப்ப மூப்பனின் வாரிசுகள் தான் 1 முதல் 25 பிரதிவாதிகள் என்றால் சரி. 1 முதல் 25 பிரதிவாதிகளுக்கு பொதுவில் 90 செண்ட் பாத்தியம். 22ம் பிரதிவாதி எப்போதும் பாகப்பிரிவினைக்கு மறுக்கவில்லை என்றால் நாங்கள் பாகப்பிரிவினைக்கு பேசினோம், அவர்கள் ஒத்துவரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்தோம். 29ம் பிரதிவாதி தான் பாகப்பிரிவினைக்கு ஒத்து வரவில்லை என்றால் அனைத்து தரப்பினர்களும் பாகத்திற்கு ஒத்து வரவில்லை. குப்ப மூப்பன் வகையறாவிற்கு அவர்களுக்கு பாத்தியப்பட்ட 90 செண்ட் பிரித்துக கொடுப்பதில் ஆட்சேபணை

இல்லை என்றால் எங்களது வழக்குப்படி பிரித்துக கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை.

<u>குறுக்கு விசாரணை (26ம் பிரதிவாதி தரப்பில்)</u>

வழக்கின் 26ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 63-1/4 சென்ட் பாத்தியம் என்றால் 120 பாகத்தில் 18 பாகம் அவருக்கு பாத்தியம். 26ம் பிரதிவாதிக்கு 63-1/4 சென்ட் பாத்தியம் என நாங்கள் ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 26ம் பிரதிவாதிக்கு 63-1/4 சென்ட் பிரித்துக் கொடுக்கும் பட்சத்தில் வாதிகளின் பாகத்திற்கும் ஆட்சேபணை இல்லை என்றால் எனக்கு அதில் மறுப்பு இல்லை. உரிய விகிதாசாரப்படி 26ம் பிரதிவாதிக்கு அவரது பாகத்தை கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2026.02.18 16:15:54 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS